மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, ஆண்டுதோறும் இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஆதி திராவிடர்களுக்கு என்று 10 இலட்ச ரூபாயும், கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஆதி திராவிடர்களுக்கு ஒரு இலட்ச ரூபாயும், பழங்குடி மக்களுக்கு 50 ஆயிரம் ரூபாயுமாக 11,50,000 ரூபாய் ஒதுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல அதிகமான அளவுக்கு ஆதி திராவிட மக்களும் பழங்குடி மக்களும் இந்தத் திட்டத்தின் பயனைப் பெற வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருப்பதை இந்த அரசு அறிந்துக் கொண்டிருக்கிற காரணத்தால், இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் இதிலிருந்து கடன் உதவி பெறுகின்றவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்துவது முறையாக இல்லாத காரணத்தால், இதை மாற்றி, தற்போது தமிழ்நாடு முழுவதும் தாட்கோ (தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வளர்ச்சி நிறுவனம்) மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்ற சிறுதொழில் மானியம் மற்றும் கடன் உதவித் திட்டத்தின் கீழ் இதையும் சேர்க்கலாம் என்று முடிவு எடுத்திருக்கிறோம். அந்த வகையில் இனிமேல் இந்த திட்டத்தின் கீழ் வழங்கும்போது முழுக் கடன் தொகையில் 25 சதவீதம் மானியமாகவும், '' தாட்கோ '' மூலம் இதர பொருளாதார முன்னேற்ற வளர்ச்சிக்காக 25 சதவீதம் குறியீட்டு கடனாகவும் (மார்ஜினல் மணி) வழங்கவும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் வழங்கவும் அவர்களுக்கு வசூல் செய்யப்படுகிற கடன் உதவிக்காக 4 சதவீதம் வட்டி கொடுக்க வேண்டுமென்றும் தற்போது இருக்கின்ற முறையை இந்தத் திட்டத்தில் மாற்றிக் கொள்ளலாம என்றும் அரசு கருதிக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல் அதிகமான ஆதி திராவிட மக்களும் பழங்குடி மக்களும் பயன் பெறுவார்கள் என்று கருதுகிறேன்.

திண்டிவனம் நகரத்தில் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர்களுக்கு விடுதி கட்டும் திட்டம்.

313—(*வினா எண் 18986)—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் நகரத்தில் பிற்படுத்தப்பட்ட பள்ளி மாணவர்களுக்கு விடுதி கட்டப்படாமல் இருப்பதற்குக் காரணம் யாது ?

(ஆ) எப்போது இப்பணி தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) மற்றும் (ஆ) திண்டிவனம் நகரத்தில் பிற்பட்டோர் வகுப்புத் துறையால் நடத்தப்படும் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி தற்போது இல்லை. எனவே, கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9-50)

திருக்காட்டுப்பள்ளியில் பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்கான விடுதி ஏற்படுத்தும் திட்டம்.

314—*வினா எண் 19398—திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் திருக்காட்டுப்பள்ளியில் பிற்படுத் தப்பட்ட மாணவிகளுக்கு விடுதி (Hostel) ஏற்படுத்த அரசிடம் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

செண்பகவல்லி அணையைப் பழுதுபார்க்கும் திட்டம்.

259—(*வினா எண். 18061)—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்பு மிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் வாசுதேவநல்லூருக்கு மேற்கே உடைந்துள்ள செண்பகவல்லி அணையைக் கட்டுவதற்கு அர சிடம் செயற் குறிப்புள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) மற்றும் (ஆ) செண்பகவல்லி அணை மற்றும் கன்யாமதுகு கால்வாயைப் பழுது பார்க்கும் பணிக்காக கேரள அரசு அனுப்பியுள்ள திருத்திய மதிப் பீட்டுக்கு தமிழக அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. பணிகளை உடனே மேற்கொள்ளுமாறு கேரள அரசு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.